# 17. நல்ல பிள்ளை



சின்ன யேசு வீட்டில் வேலைகள் செய்தார். அம்மாவுக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். தச்சு வேலைகள் செய்வதற்குத் தந்தைக்கு உதவி செய்தார்.



சின்ன யேசுவுக்கு நண்பர்கள் பலர். இருந்தனர் அவர்க ளோடு யேசு பாடம் படித்தார். நண்பர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.



யேசு நண்பர்களுடன் விளை யாடுவதைப் பார்த்து அம்மாவும் அப்பாவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.



சின்ன யேசு ஒவ்வொரு நாளும்
தனது அம்மா, அப்பாவோடு சேர்ந்து இறை தந்தையுடன் கதைத்தார்.
நாங்களும் நமது அம்மா, அப்பாவோடு சேர்ந்து இறை தந்தையுடன் உரையாடுவோம்.